செ.வெ.எண்: 65 நாள்:28.10.2021

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை**

**பெண் குழந்தைகளுக்கான மாநில விருது அறிவிப்பு**

தமிழக அரசு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம், பெண், கல்வி, பெண் குழந்தை தொழிலாளர் ஒழிப்பு, குழந்தை திருமணத்தை தடுத்தல், வேறு ஏதாவது வகையில் சிறப்பான தனித்துவமான சாதனை செய்திருத்தல், சமூக அவலங்கள், மூடநம்பிக்கைகள் மற்றும் அதனை தீர்வு காண்பதற்கு ஓவியங்கள், கவிதைகள் மற்றும் கட்டுரைகள் மூலமாகவோ விழிப்புணர்வு ஏற்படுத்தியிருத்தல், மற்றும் ஆண்கள் மட்டுமே சாதிக்க முடியும் என்பது போன்ற செயல்களை பெண்களாலும் சாதிக்க முடியும் என்று சாதித்திருத்தல் போன்ற செயல்களில் பாடுபட்டு வீரதீர செயல் புரிந்த 18 வயதிற்குட்பட்ட (டிசம்பா 31,2021ன் படி) பெண் குழந்தைகளை சிறப்பிக்கும் விதமாக மாநில விருது ஒன்றை அறிவித்து அரசாணை பிறப்பித்து செயல்படுத்தி வருகிறது.

இதன்படி வருடந்தோறும் மேற்குறிப்பிட்டவாறு வீரதீர செயல் புரிந்த பெண் குழந்தை ஒருவருக்கு தேசிய பெண் குழந்தை தினத்தில் (ஜனவரி 24) பாராட்டு பத்திரமும், ரூபாய் 1 இலட்சத்திற்கான காசோலையும் வழங்கி சிறப்பிக்கப்படுகிறது.

மேற்காணும் விருதிற்கு குழந்தையின் பெயர், தாய்/தந்தை முகவரி, ஆதார் எண், புகைப்படம், குழந்தை ஆற்றிய அசாதாரணை வீர, தீர செயல் மற்றும் சாதனைகள் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கலாம். மேலும், உரிய முன் மொழிவுகளை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், காவல்துறை, குழந்தைகளுக்காக பணிபுரியும் சிறந்த தொண்டு நிறுவனங்களும் அனுப்பலாம். மேற்படி விருதினை பெறுவதற்கு நாகப்பட்டினம் மாவட்த்தில் தகுதியான நபர்கள் இருப்பின் விண்ணப்பங்களை மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலகம், நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம், (தொலைபேசி எண்:04365-243045) என்ற முகவரிக்கு 24.11.2021 அன்று மாலை 5.00 மணிக்குள் அனுப்பி வைத்திடுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**